பயிலரங்க எண்ணிக்கைகள்: 114 நாள்: 28.01.2026

# செம்மொழித் தமிழ் மின் நூலகம்

நடத்தும்

# செவ்வியல் சுவடிகளுக்கான செயற்கை நுண்ணறிவு (AI): பாதுகாப்பு, படியெடுத்தல் மற்றும் பகுப்பாய்வு முறைகள்

# AI for Digital Manuscripts: Preservation, Transcription, and Analysis of Classical Texts

## பயிலரங்கம் - 33

(19.02.2026 - 25.02.2026)

## அறிவிப்பும் அழைப்பும்

மாறிவரும் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தமிழ் மொழிசார்ந்த பல்வேறு ஆய்வு முன்னெடுப்புகளைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக, ஓலைச் சுவடிகள், தாட்சுவடிகள், அரிய பழம்பதிப்பு நூல்கள் ஆகியவற்றை எண்ணிமமாக்கல் (Digitization), எழுத்துணரியாக்கல் (OCR), போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி தமிழ்மொழி ஆய்வை மேம்படுத்திக்கொண்டே வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஓலைச்சுவடிகள் மற்றும் தாட்சுவடிகளை செயற்கை நுண்ணறிவின் மூலம் விரைவாக எண்ணிமப்படுத்துவது போன்ற நுட்பங்களை இளந்தலைமுறை ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு கொண்டு சென்று தமிழ்மொழி சார்ந்த ஆய்வுகளை அடுத்தக் கட்டத்திற்கு பாய்ச்ச வேண்டும்

என்ற நோக்கில் "செவ்வியல் சுவடிகளுக்கான செயற்கை நுண்ணறிவு (AI): பாதுகாப்பு, படியெடுத்தல் மற்றும் பகுப்பாய்வு முறைகள்" என்னும் தலைப்பில் பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் கலந்து கொள்பவர்கள் சுவடிகள் / கல்வெட்டுகள் தொடர்பான சான்றிதழ் / பட்டயச் சான்றிதழ் பெற்றிருத்தல் நலம். நிறுவனங்கள் / பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் சுவடி / கல்வெட்டு தொடர்பான முனைவர் பட்ட ஆய்வாளர்கள் (தமிழ்/வரலாறு/கணினி) இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

இப்பயிலரங்கு, செவ்வியல் சுவடிகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகளை ஆராய்வதற்கும், புதுமையான நடைமுறைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், அறிவு மேலாண்மை குறித்த நுட்பங்களை அறிந்துகொள்வதற்கும் நுண்ணறிவுமிக்க விவாதங்கள், நேரடிப் பயிற்சிகள் வழங்கப்படும்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள **அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 50**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **19.02.2026 முதல் 25.02.2026 வரை 7 நாட்கள்.**
- பயிலரங்கு நேரம்: **காலை 10.00 மணி முதல் - 1.00 மணி வரை & மதியம் 2.00 மணிமுதல் - 5.00 மணி வரை.**
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்வோர் **மடிக்கணினியோடு வருதல் நன்று**.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/aFvezfjMYmEwUYBe9 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **12.02.2026** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **13.02.2026** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் **26 அமர்வுகளிலும்** தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**